1974 சனவரி 23]

அரசு தமிழ்ப் புலவர் தகுதியைப் பட்டப்படிப்பாக அறிவிக்க முன் வருவதற்கு நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தகுதியைப் பொறுத்தவரையில், முதல் நிலை தமிழாசிரியர்கள், பி.ஏ., பி.டி. படித்த ஆசிரியர்களுக்குச் சரி சமமான தகுதி படைத்தவர்களாகத்தான் இருக்கின்றார்கள். இன்றைக்கு தலைமையாசிரியராக வருவதற்கு என்று சில குவாலிபிகேசன்ஸ் வகுத்திருக்கின்றார்கள். அந்தத் தலைமையாசிரியர் பதவிக்குத் தகுதி பெற வேண்டுமென்றால், இன்னின்ன கல்வித் தகுதிகள் பெற வேண்டும் என்று பல்கலைக் கழகமும் வற்புறுத்துகின்றது. இதுதான் இதில் இருக்கின்ற சங்கடம்.

Rates of Pension.

* 39. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any disparity in the rates of pensions of the retired teachers before and after 2nd October 1970; and

(*b*) if so, whether the Government will issue orders to rectify the anomalies?

ஓய்வூதிய விகிதங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 2—10—1970-க்கு முன்னும், பின்னும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் ஓய்வூதிய விகிதங்களில் வித்தியாசம் ஏதும் இருந்து வருகிறதா ?

(இ) ஆமெனில், அதை நீக்க அரசு உத்தரவிடுமா

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு 1—6—1970 க்கு முன்பு 30/120 என்ற விகிதத்திலும் அதற்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு 30/80 என்ற விகிதத்திலும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

(இ) இது கொள்கை ரீதியாக இருப்பதால் இந்த வேறுபாட்டை நீக்க வேண்டிய அவசியமில்லை.

[1974 சனவரி 23

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, why is this facility not extended to College teachers?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலும் இப்போதுதான் தனியார் கல்லூரிகளில் பணியாற்றுகிறவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கிறது. எந்த விகிதம் என்று தெரியவில்லை. தனியாக அவர்கள் கேட்பார்களானால், அரசாங்கம் அது பற்றி யோசிக்கும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்த வித்தியாசத்தைப் போக்குவதற்கு விரைவான நடவடிக்கை எடுப்பது பற்றி அரசாங்கக் குறிப்பில் இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதற்கு முன்னால் இருந்த விதிமுறைகளின்படி அப்போது அப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு நிலை. இப்போது, சம்பளக் கமிஷன் சிபார்சுப் படி, சம்பள விகிதங்கள், உயர்வுகள், மற்றவைகளைப் பொறுத்து வேறு ஒரு முறை கையாளப்படுகிறது. எல்லாவற்றையும் ஒரே முறையாகக் கையாள்வது என்பது பொருந்தி வராது. ஆகவே, அதற்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்குத் தனி விகிதாசாரம் என்று கணக்கிட வேண்டியிருக்கிறது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, ஆசிரியர்களுக்கு ஓய்வு பெறும் வயது 58 ஆக உள்ளது. தனியார் பள்ளிகளில் 60 வயது வரை வைத்துக் கொள்வதற்கு அனுமதி உள்ளது. அந்த அடிப்படையில் 2—10—1970 அன்று ஆசிரியர்களாகப் பணியாற்றிய அனைவருக்கும் இந்த 3/8 ஓய்வூதியம் வழங்க அரசு பரிசீலனை செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதுபற்றி விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால், இதுபற்றி ஆராய்ந்து சொல்லப்படும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, 2—10—1970 க்கு முன்னால், ஒரு தேதிக்கு முன்னால் அதாவது 1—10—1970-ல் ரிடையரானவர்கள் அதிகச் சம்பளம் பெற்று ரிடையரானாலும், குறைந்த பென்ஷனும், 2—10—1970-ல் ரிடையரானவர்கள் அவர்களைவிடக் குறைந்த சம்பளம் பெற்றிருந்தாலும், அதிகப் பென்ஷனும் பெறுகிற நடைமுறை இருக்கிறது. 2—10—1970-க்கு முன்னால் ரிடையரானவர்கள் கொஞ்சம் பேர்கள்தான் இருக்கிறார்கள். அவர்

1974 சனவரி 23]

களுக்கும் இதே நிலைமையில் அரசு ஓய்வூதியத்தை வழங்குமா? ரிடையரான வர்களை இரண்டு விதமாகப் பிரிக்காமல் ஒரே லிஸ்டில் வைக்குமா? அவர்கள் ஒரேமாதிரித் தன்மையில்தான் இருக்கிறார்கள். ஒரு நாளைக்கு முன்னால் ரிடையரானதால் அவர்களுக்குக் கம்மியாகவும், ஒரு நாளைக்குப் பின்னால் ரிடையரானவர்களுக்கு அதிகமாகவும் கிடைக்கிற நிலைமை நியாயமில்லாத ஒன்று. ஆகவே, தயவுசெய்து பென்ஷன் விகிதத்தை ரி-பிக்ஸ் செய்து, முன்னாலே ரிடையரானவர்களுக்கு, பின்னால் ரிடையரானவர்கள் தகுதியில் அளிக்க அரசு முன்வருமா? இதுபற்றி அறிவிக்குமாவென்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 2—10—1970-க்குப் பிறகு புதிய சம்பள விகிதங்கள் வருகின்றன. ஆனால் ஓய்வூதியத்தைக் கணக்கிடுகிறபோது, ஆசிரியர்களைப் பொறுத்து, 1—6—1970 லிருந்து கணக்கிடப்படுகிறது. 2—10—1970 லிருந்து கணக்கிடவேண்டியிருந் தாலும், ஆசிரியர்களைப் பொறுத்து 1—6—1970-லிருந்து கணக்கிடப்படுகிறது. வேறு எந்தத் துறைக்கும் இந்தச் சலுகை தரப்படவில்லை. ஆசிரியர்களுக்கு மட்டும் தரப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்கின்படி செய்யப்படுகிறது. அப் போதிருந்த சம்பள முறைகள், விதி முறைகள், கணக்கிட வேண்டிய தன்மை கள் வேறு. அதற்குப் பிறகு வந்த சம்பள முறைகள், விதி முறைகள், கணக் கிட வேண்டிய தன்மைகள் வேறு. ஆகவே, இரண்டு முறைகளையும் ஒன்றாக ஆக்குவதற்கில்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

திரு. க. அறிவழகன்: தலைவரவர்களே, தனியார் கல்லூரிகளில் வேலை பார்க்கிற ஆசிரியர்களுக்கு அரசு கடந்த டிசம்பர் திங்களில் ஓய்வூதியம் வழங்கியிருக்கிறது. ஆனால் தனியார் பாலிடெக்னிக்குகளில் வேலை பார்க்கிற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குகிற திட்டம் அறிவிக்கப்படாததினால், அவர்கள் பெறவில்லை. அது வழங்கப்படுமா? 2—10—1970-க்குப் பின் என்று இருந்ததை 1—6—1970-க்கு முன் என்று அரசு மாற்றி ஆசிரியர்களுக்கு உதவி செய்திருக்கிறது. இதை விட இதற்கு முன்னால் ஓய்வு பெற்ற எல்லா ஆசிரியர்களுக்கும் இதே 3/8 என்ற விகிதத்தில் வழங்குவதனால் அரசுக்கு அதிக நிதிச் செலவு ஆகாது என்று கருதுவதால், இதையும் பரிசீலிக்குமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பல தடவை பரிசீலித்து, இந்த முறையை மாற்றுவதற்கில்லை என்று நிதித் துறை யும், மற்றவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். பாலிடெக்னிக்கைப் பொறுத்த வரையிலும், ஓய்வூதியம் தருகிற நிலைமை பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, தற்போது கொஞ்ச நாட்களுக்கு முன்னால் முனிசிபாலிடியிலிருந்து ரிடையரான ஆசிரியர்களுக்கு பென்ஷன் முனிசிபாலிடி ரூல்ஸ்படி அமுல்படுத்துவதன் காரணமாக நிறுத்தப்பட்டு விட்டது. 9 மாதமாக நிறுத்தப்பட்டு ரி-பிக்ஸ் செய்யப்படாமல் இருக்கிறது. இப்படி ஏராளமான ஆசிரியர்களுக்கு உடனடியாக ஓய்வூதியம் வழங்க அரசு விரைவாக உத்தரவிடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, காலத் தாழ்விற்கு என்ன காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டு விரைவுபடுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

Gazetted Status to Headmasters of Government High Schools.

* 40 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government propose to accord Gazetted status to all Headmasters of Government High Schools; and

(b) if so, the stage at which the matter stands?

அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கட்கு அரசிதழ் பதிவுத்தரம்

திரு. கே. எஸ். கணபதி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) அரசு உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் அனைவருக்கும் அரசிதழ் பதிவுத்தரம் அளிக்க அரசு கருதியுள்ளதா ?

(இ) ஆமெனில், அச்செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) எல்லா அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களையும் அரசிதழ் பதிவு பெற்றவர்களாக்குவது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS